சுற்றுநிருப இல : 02/2018

# கல்வி அமைச்சு

# சமூக விஞ்ஞானப் போட்டிகள் (தமிழ் மொழிமூலம்)
# (2018 ஆம் ஆண்டு முதல் அமுலாகும் வகையில்)

## தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை
## சமூக விஞ்ஞான அலகு

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்லை.

# உள்ளடக்கம்

**பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | சுற்றறிக்கை | |
| | தமிழ் | i |
| | ஆங்கிலம் | iii |
| 2. | அறிமுகமும் பொது இலக்குகளும் | 1 |
| 3. | அடிப்படை ஆலோசனைகள் | 2 - 3 |
| 4. | பாடசாலைகளை வகைப்படுத்தல் | 4 - 5 |
| 5. | போட்டி மட்டங்கள் | 6 - 7 |
| 6. | போட்டியின் சட்ட விதிகள் | 8 - 11 |
| 7. | போட்டி வகைகளும் ஒழுங்கமைப்பும் | |
| | பொது ஆலோசனைகள் | 12 - 24 |
| 8. | மாதிரி வினாக்கள் | |
| | தரம் 6 | 25 - 28 |
| | தரம் 7 | 29 - 32 |
| | தரம் 8 | 33 - 38 |
| | தரம் 9 | 39 - 43 |
| | தரம் 10 | 44 - 49 |
| | தரம் 11 | 50 - 55 |
| | தரம் 12/13 | 56 - 63 |
| 9. | மாதிரி இலங்கை, உலகப்படம் | 64 - 65 |

දුරකථන/தொலைபேசி இல./Telephone

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832 2784807 2785617

ලේකම්
செயலாளர்
Secretary } 2784812

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50 **Fax**: 2784846

ඊ මේල්/ஈ - மெயில் E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය
உமது இல.
Your No. } .............................

**අධ්‍යාපන අමාත්‍යාංශය**
**கல்வி அமைச்சு**
**Ministry of Education**

'ඉසුරුපාය',
බත්තරමුල්ල.
'இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya",
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. } ED/01/05/05/07/11

දිනය
திகதி
Date } 2018.01.19

சுற்றறிக்கை இல. 02/2018

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல வலயக் கல்வி பணிப்பாளர்கள்
சமூக விஞ்ஞானப் பணிப்பாளர்கள்
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல அதிபர்கள்
சகல சமூக விஞ்ஞான பாடத்துறை சார்ந்த ஆசிரிய ஆலோசகர்கள்

பாடசாலை, வலய, மாகாண, அகில இலங்கை மற்றும் தேசிய மட்ட சமூக விஞ்ஞான போட்டித் தொடரை நடத்துவது தொடர்பான சுற்றறிக்கை மறுசீரமைப்பு.

கல்விச் செயலாளரின் இல 2012/20 மற்றும் 2012.07.10 ஆந் திகதியிடப் பட்ட சமூக விஞ்ஞான சுற்றறிக்கையை 2018.01.01 ஆந் திகதி முதல் நடை முறைப்படுத்தப்படும் வகையில் இதனூடாக மறுசீரமைப்பு செய்கின்றேன்.

இதன்படி பாடசாலை மட்ட சமூக விஞ்ஞான வருடாந்த போட்டி தொடருக்குரிய இச்சுற்றறிக்கை சட்டவிதிகளுடன் அதனோடு இணைத்து வழங்கப்பட்டுள்ள ஆலோசனை கோவைக்கு அமைய இப்போட்டித் தொடர் நடாத்தப்படுவதோடு இச்சுற்றறிக்கையின் சட்டவிதிகள் 2018-01-01 முதல் நடைமுறைக்கு வரும் என்பதை விஷேடமாக அறியத்தருகின்றேன்.

மாகாண, வலய, கோட்ட, பாடசாலை மட்டங்கள் தொடர்பில் சரியான வகையில் விளக்கமளிக்கப்பட்டு 2018 ஆம் வருடம் முதல் வருடாந்தம் அவ்வவ் மட்டங்களின் அடிப்படையில் இப்போட்டித் தொடரை நடத்துவதற்கும் பின்னர் அகில இலங்கை மற்றும் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவ மாணவிகளை தெரிவு செய்வதற்கும் விஷேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref.: ED/01/05/05/07/11

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.:

දිනය / திகதி / Date: 2018.03.22

Circular No.: 02/2018

All Provincial Secretaries of Education,
All Provincial Directors of Education,
All Zonal Directors of Education,
Subject Directors for Social Sciences,
All Divisional Directors of Education,
All Principals,
All ISA's for Social Sciences,

**Amendment of the circular for conducting Social Science Competitions at School, Zonal, Provincial, All Island and National Levels**

The circular No. 2012/20 dated 10.07.2012 issued by then Secretary to the Ministry of Education is amended herewith to be effective from 01.01.2018.

Accordingly, the above Competition should be conducted as per the rules and regulations stipulated in the amended circular at the school level annual social science competitions and the instructional manual attached. These rules and regulations are effective from 01.01.2018.

A proper awareness protocol has to be followed at the provincial, zonal, divisional and school levels and from the beginning of 2018, the competition has to be conducted annually at each level, and the winners have to be selected at the all island and national levels.

Sunil Hettiarachchi,
Secretary,
Ministry of Education.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister: +94112784832, +94112784825, minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary: +94112784811, +94112785162, secretary.education@moe.gov.lk

# சமூக விஞ்ஞானப் போட்டித் தொடர்

## 1. அறிமுகம்.

கல்வியமைச்சின் மானுடவியல் கற்கை மற்றும் சமூக விஞ்ஞான பிரிவின் வழிநடத்துதலில் நாடு முழுவதும் பரவலான வகையில் நடாத்தப்படும் சமூக விஞ்ஞானப் போட்டி சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றது. பாடசாலை, வலய, மாகாண அகில இலங்கை, தேசிய மட்டத்தில் போட்டி நடாத்தப்பட்டு வெற்றியீட்டிய மாணவ மாணவிகளை தெரிவு செய்து அவர்களை கௌரவித்து பாராட்டுதல் இங்கு நடைபெறும்.

சமூக விஞ்ஞான பாடங்கள் போன்று அதனோடு இணைந்த சமகாலத் தகவல்கள் தொடர்பாக ஆசிரியர்களினதும் மற்றும் மாணவ மாணவியர்களினதும் ஈடுபாட்டை விருத்தியடையச் செய்வதன் மூலம் பாடத்தோடு இணைந்த பரந்த கல்வி இலக்குகளை அடைதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. சமூக விஞ்ஞான போட்டித்தொடரின் பொது இலக்குகள்

- பல்வேறு தொடர்பாடல் ஊடகங்கள் வாயிலாக சமூக விஞ்ஞான பாடங்களோடு இணைந்த சமகால தகவல்களை சேகரித்து கற்றல் நடவடிக்கைகளை விருத்தி செய்து கொள்வர்.
- நேரடி கற்றல் சந்தர்ப்பங்கள் ஊடாக அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் நற்பண்புகளை விருத்தி செய்து கொள்வர்.
- வாழ்க்கையின் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு அவசியமான தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்வர்.
- மனித சமூகத்தினுள் ஒற்றுமையாக மற்றும் ஒத்துழைப்புடன் வாழ்வதற்கு தேவையான திறன்களை விருத்தி செய்து கொள்வர்.
- சூழல் நேயமுடைய சிறந்த பிரஜையொருவரை உருவாக்குவதற்கு தேவையான மனப்பாங்கினை விருத்தி செய்து கொள்வர்.

## 3. அடிப்படை ஆலோசனைகள்

3.1 இப்போட்டித்தொடர் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடாத்தப்படல் வேண்டும்.

3.2 சகல போட்டிகளும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நேர அட்டவணைக்கு அமைவாக நடாத்தப்படல் வேண்டும். (ஆலோசனை இல. 8 ஐப் பார்க்கவும்).

3.3 இப்போட்டிகள் நடைபெறும் திகதி பாடசாலையின் வருடாந்த நாட்காட்டியில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

3.4 பாடசாலை மட்டத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியது **கட்டாயமானதாகும்.**

3.5 தரம் 6 - 13 வரை சகல மாணவர்களும் இப் போட்டியில் பங்கு கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும்.

3.6 போட்டி ஏற்பாடுகள் தொடர்பாக பாடசாலையின் சமூக விஞ்ஞான பாடங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்ளைக் கொண்டு ஏற்பாட்டு குழுவொன்றினை நியமித்து முறையான விதத்தில் போட்டியை நடாத்துதல் அதிபரின் பொறுப்பாகும்.

3.7 போட்டியை நடாத்துதல், சட்டவிதிகள் மற்றும் புள்ளி வழங்கும் முறை தொடர்பாக மாணவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டியதுடன் போட்டி நடாத்தப்பட்டு ஒரு வாரத்தினுள் தர மட்டங்களின் அடிப்படையில் புள்ளிகளுடன் பெறுபேறுகள் பாடசாலையில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

3.8 பாடசாலை மட்டப் போட்டிகளில் 1,2,3 ஆம் இடங்களை பெற்றுக்கொள்ளும் வெற்றியாளர்களின் பெயர்ப்பட்டியல் ஆலோசனை இல 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேற்று அட்டவணை மாதிரியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு சமூக விஞ்ஞான பாடத்திற்குப் பொறுப்பான பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

3.9 வலய மட்டம் மற்றும் அதற்கு மேல் மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களின் ஆள் அடையாளம் அதிபரால் உறுதிப்படுத்திப்பட வேண்டியதுடன் அதன் போது மாணவரின் பெயர், தரம், பாடசாலை வகை, வலயம் போன்றவற்றை மிகச்சரியாக குறிப்பிட வேண்டியது அதிபரின் பொறுப்பாகும்.

3.10 வலய மற்றும் மாகாண மட்ட போட்டிகளில் 1,2,3, ஆம் இடங்களை பெற்றுக் கொள்ளும் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

3.11 அவ்வப் போட்டி மட்டங்கள் தொடர்பில் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகளினால் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும். (ஆலோசனை இல 10/ 2,3,4,5 இன்படி செயற்படவும்.)

3.12 வலய மட்டப்போட்டிகள் வலயக் கல்விப் பணிப்பாளரினாலும் மாகாண மட்டப் போட்டிகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரினாலும், அகில இலங்கை மற்றும் தேசிய மட்டப் போட்டிகள் கல்வியமைச்சின் மானுடவியல் கற்கை மற்றும் சமூக விஞ்ஞானப் பிரிவினாலும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

3.13 பாடசாலை, வலய, மாகாண, அகில இலங்கை போட்டி மட்டங்களின் விடைத்தாள்கள் மற்றும் பெறுபேற்று பதிவுகள் தொடர்பான ஆவணங்கள் தேவைப்படும் பட்சத்தில் மேற்பார்வைக்கு உட்படுத்த பொருத்தமான வகையில் பாதுகாப்பாக பேணப்பட வேண்டியது அவசியமானதாகும்.

3.14 பாடசாலை மட்டப் போட்டிகளில் 1,2,3 ஆம் இடங்களைப் பெற்றுக் கொள்ளும் **மாணவர்கள் மூவர் மாத்திரமே** வலய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள தகைமை பெறுவர்.

3.15 வலய மட்டப் போட்டிகளில் 1,2,3, ஆம் இடங்களைப் பெற்றுக் கொள்ளும் **மாணவர்கள் மூவர் மாத்திரமே** மாகாண மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள தகைமை பெறுவர்.

3.16 மாகாண மட்டப் போட்டிகளில் 1,2,3 ஆம் இடங்களை பெற்றுக்கொள்ளும் **மாணவர்கள் மூவர் மாத்திரமே** அகில இலங்கைப் மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள தகைமை பெறுவர்.

3.17 அகில இலங்கை மட்டத்தில் வெற்றியாளர்களிலிருந்தே தேசிய மட்டத்திலான வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

## 4. போட்டித் தொடருக்காக பாடசாலைகளை வகைப்படுத்தல்

மாணவர் எண்ணிக்கை குறைந்த மற்றும் கூடிய அளவில் காணப்படும் சகல பாடசாலைகளிலும் தரம் - 06 முதல் தரம் - 13 வரையில் கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் வாய்ப்பினை வழங்கும் நோக்கில் பாடசாலை வகைப்படுத்தலை நான்கு பிரிவுகளாக வகுத்து சகல போட்டிகளும் நடாத்தப்படும்.

I. 200 மாணவர்கள் வரையான பாடசாலை

II. 201 - 500 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலை

III. 501 - 1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலை

IV. 1000 ற்கு கூடுதலான மாணவர்களைக் கொண்ட பாடசாலை

**கவனத்திற்கு :**

மேற்குறிப்பிட்ட இம்மாணவர் எண்ணிக்கை கணிப்பு செய்யப்பட வேண்டியது ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரி 31 ஆம் திகதி பாடசாலையில் தரம் 6-13 வரை கல்வி பயிலும் முழு மாணவர் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டாகும்.

## 5. போட்டி மட்டங்கள் (பிரதான போட்டி மட்டங்கள் நான்காகும்)

I. பாடசாலை மட்டப் போட்டிகள்

II. வலய மட்டப் போட்டிகள்

III. மாகாண மட்டப் போட்டிகள்

IV. அகில இலங்கை மற்றும் தேசிய மட்டப் போட்டிகள்

## 6. போட்டியின் சட்ட விதிகள்

6.1 ஒவ்வொரு போட்டி மட்டங்களின் போது (பாடசாலை, வலய, மாகாண) 1,2,3 ஆம் இடங்களை வெற்றி கொள்ளும் மாணவர் மூவர் மாத்திரமே அடுத்தடுத்த போட்டிகளில் பங்கு கொள்ள முடியும்.

6.2 வினாத்தாள் தயாரித்தல், அச்சிடல், விநியோகித்தல், பரீட்சை நடாத்துதல், விடைத்தாள் மதிப்பீடு செய்தல், புள்ளிப்பதிவு அறிக்கைகளை தயார் செய்து கொள்ளல் போன்ற நடவடிக்கைகளின் போது இரகசியத்தன்மை பேணப்படும் வகையிலும் மற்றும் நியாயமானதுமான வகையிலும் செயற்படுதல் உரிய அதிகாரிகளின் பொறுப்பாகும்.

6.3 அப்பொறுப்புக்களை வகிக்கும் அதிகாரிகளின் விபரம் பின்வருமாறு

- பாடசாலை மட்டம் - அதிபர்
- வலய மட்டம் - சமூக விஞ்ஞானப்பாட பொறுப்பு வலயகல்விப் பணிப்பாளர்
- மாகாண மட்டம் - சமூக விஞ்ஞானப்பாட பொறுப்பு மாகாணக் கல்விப் பணிப்பாளர்
- அகில இலங்கை / தேசிய மட்டம்

  கல்வியமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் பணிப்பாளர்

## 7. போட்டி வகைகளும் ஒழுங்கமைப்பும்

| தரம் | போட்டி | வினாத்தாள் எண்ணிக்கை | வினாக்களின் எண்ணிக்கை | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 06 | எழுத்து மூலப் பரீட்சை | 01 | 35 | 01 மணி 15 நிமிடம் | 100 |
| 07 | எழுத்து மூலப் பரீட்சை | 01 | 35 | 01 மணி 15 நிமிடம் | 100 |
| 08 | எழுத்து மூலப் பரீட்சை | 01 | 40 | 01 மணி 30 நிமிடம் | 100 |
| 09 | எழுத்து மூலப் பரீட்சை | 01 | 40 | 01 மணி 30 நிமிடம் | 100 |
| 10 | எழுத்து மூலப் பரீட்சை | 01 | 45 | 02 மணி | 100 |
| 11 | எழுத்து மூலப் பரீட்சை | 01 | 45 | 02 மணி | 100 |
| 12/13 | எழுத்து மூலப் பரீட்சை | 01 | 50 | 02 மணி 30 நிமிடம் | 100 |

## 8. போட்டிகளின் நேர அட்டவணை

| தொ இல. | போட்டி மட்டம் | போட்டிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய திகதி | பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய திகதி | பொறுப்பு வகிக்கும் அதிகாரிகள் |
|---|---|---|---|---|
| 01 | பாடசாலைப் போட்டிகள் | மே 05இற்கு முன் | மே 30இற்கு முன் | உரிய பாடசாலை அதிபர் |
| 02 | வலயப் போட்டிகள் | யூன் 30இற்கு முன் | யூலை 25இற்கு முன் | சமூக விஞ்ஞான பாட பொறுப்பு வலயக் கல்வி பணிப்பாளர் |
| 03 | மாகாணப் போட்டிகள் | செப்டம்பர் 15இற்கு முன் | அக் - 10இற்கு முன் | சமூக விஞ்ஞான பாட பொறுப்பு மாகாணக் கல்விப் பணிப்பாளர் |
| 04 | அகில இலங்கை தேசிய மட்டப் போட்டி | அக்டோபர் 30இற்கு முன் | டிசம்பர் 30இற்கு முன் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படல் வேண்டும் | கல்வியமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் கல்வி பணிப்பாளர் |

**கவனத்திற்கு :**

போட்டிகளை நிறைவு செய்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் என்பன இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னரேயே நடத்தி முடிக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

## 9. போட்டி ஏற்பாடுகள்

### 9.1 பாடசாலை மட்டப் போட்டிகள்

கோட்டக் கல்வி பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் அதிபரின் தலைமையில் சமூக விஞ்ஞான பாட பொறுப்பாசிரியர்களை உள்ளடக்கிய குழுவொன்றின் ஊடாக முறையான விதத்தில் போட்டிக்கு உரிய எழுத்து மூலப்பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

### 9.2 வலய மட்டப் போட்டிகள்

மாகாணக் கல்வி பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் வலயக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் சமூக விஞ்ஞான பாடப் பொறுப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் ஊடாக ஆசிரிய ஆலோசகர்களின் ஒத்துழைப்புடன் நடைபெறல் வேண்டும். வலயத்திற்குள் தெரிவு செய்யப்பட்ட பொருத்தமான இடமொன்றை பரீட்சை மத்திய நிலையமாகக் கொண்டு முறையான விதத்தில் பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

இதன் போது மாகாணத்தில் உள்ள வலயங்கள் சார்பில் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து பொது வினாத்தாளொன்றைத் தயாரித்து ஒரே திகதியில் ஒரே நேர அட்டவணையின் படி பரீட்சை நடாத்தப்படல் மிகவும் பொருத்தமானதாகும்.

### 9.3 மாகாண மட்டப் போட்டிகள்

மாகாணக் கல்வி பணிப்பாளரின் கீழ் மாகாண சமூக விஞ்ஞான பாடப்பொறுப்பு பணிப்பாளரினால் மாகாணத்தினுள் தெரிவு செய்யப்பட்ட பொருத்தமான இடமொன்றை பரீட்சை மத்திய நிலையமாகக் கொண்டு முறையான விதத்தில் பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

### 9.4 அகில இலங்கை மற்றும் தேசிய மட்டப் போட்டிகள்

கல்வியமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளையின் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் சமூக விஞ்ஞான பிரிவுக்குப் பொறுப்பான பிரதி மற்றும் உதவிக்கல்வி பணிப்பாளரின் பங்களிப்பில் முறையான விதத்தில் பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றி யாளர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

## 10. சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள்

10.1 சகல போட்டி மட்டங்களின் போதும் 1,2,3 ஆம் இடங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டியதுடன் அகில இலங்கை மட்டத்தில் 1,2,3ஆம் இடங்களை பெற்றுக் கொள்ளும் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களோடு பதக்கங்களும் வழங்கப்படல் வேண்டும்.

10.2 அகில இலங்கை மட்டத்தில் 4ம் இடம் தொடக்கம் 10ம் இடம் வரை பெற்ற மாணவர்களுக்கு வெற்றிச் சான்றிதழ்கள் வழங்கப்படல் வேண்டும்.

10.3 அகில இலங்கை மற்றும் தேசிய போட்டியில் பங்கு கொள்ளும் சகல போட்டியாளர்களுக்கும் கல்வியமைச்சின் ஊடாக பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

10.4 பாடசாலை மட்டத்தின் போது அதிபர் மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடனும்

10.5 வலய மட்டத்தின் போது வலயத்தின் பாடப் பொறுப்பு கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடனும்

10.6 மாகாண மட்டத்தின் போது மாகாண பாடப் பொறுப்பு கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்வி பணிப்பாளரின் கையொப்பத்துடனும்

10.7 அகில இலங்கை மற்றும் தேசிய மட்டத்தின் போது கல்வியமைச்சின் மானுடவியல் கற்கை மற்றும் சமூக விஞ்ஞான பிரிவின் கல்விப் பணிப்பாளரினதும், கல்வியமைச்சின் செயலாளரினதும், கையொப் பத்துடன் சான்றிதழ்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

10.8 இப்போட்டித் தொடரின் போது சகல மட்டங்களினதும் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் போட்டி நடைபெறும் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

மாணவர் அடையாளப் படிவத்தின் மாதிரி

**சமூக விஞ்ஞான போட்டித் தொடர் 20......**

**வலய / மாகாண / அகில இலங்கை / தேசிய**

1. மாணவன் / மாணவியின் பெயர் ……………………………..
   (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
2. கற்கும் தரம் ……………………………….
3. கல்வி கற்கும் பாடசாலை ……………………………….
4. பாடசாலை உரித்தாகும் கல்வி வலயம் ………………………..
5. தரம் 6-13 வரை மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் உரித்தாகும் பாடசாலை வகையின் கீழ் கோடிடவும்.
   200 வரையிலான / 201-500 / 501-1000 / 1000 இற்கு மேல்
6. மாணவன் / மாணவியின் கையொப்பம் ……………………………….

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், சரியானது எனவும் இம் மாணவன் / மாணவி சமூக விஞ்ஞானப் போட்டித் தொடரில் வலய / மாகாண /அகில இலங்கை தேசிய மட்டப் போட்டிக்கு தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………..
அதிபர்

…………………………….
பதவி முத்திரை

…………………………….
திகதி

## 11. பெறுபேற்றுப் படிவத்தின் மாதிரி

சமூக விஞ்ஞானப் போட்டித் தொடர் 20.....
பெறுபேற்றுப் படிவம்

- பாடசாலையின்/ வலயத்தின்/ மாகாணத்தின் பெயர் மற்றும் முகவரி ....................................................................................................................
- நடப்பு ஆண்டின் ஜனவரி 31ஆம் திகதியில் பாடசாலையில் 6-13 தரங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை ...............
- பாடசாலை வகை (மாணவர் எண்ணிக்கை அடிப்படையில்) .............

| தரம் | பெற்றுக் கொண்ட இடம் | பரீட்சை சுட்டெண் | வெற்றி பெற்ற மாணவன்/ மாணவியின் முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் | பால் | பாடசாலையின் பெயரும் முகவரியும் | வலயம் |
|---|---|---|---|---|---|---|
| 06 | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| 07 | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| 08 | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| 09 | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| 10 | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| 11 | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| 12/13 | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள போட்டிகள் கல்வியமைச்சின் சுற்றறிக்கை இல. 02/2018 படி இப்பாடசாலையில் வலயத்தில்/மாகாணத்தில் சட்டவிதிகளுக்கமைய முறையாக நடத்தப்பட்டதெனவும், அதன்படி மேலே காட்டப்பட்டுள்ளவை பெறுபேறுகளின் அடிப்படையில் அமைந்த வெற்றி பெற்ற மாணவர்களின் உண்மைத் தகவல்கள் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

...............................................
அதிபர் / வலய, மாகாண பாடப்பொறுப்பு
கல்விப் பணிப்பாளர்

.....................................
திகதி

.....................................
பதவி முத்திரை

**கவனத்திற்கு :**

மேற்குறிப்பிட்ட பெறுபேற்றுப் படிவத்தை தயாரிக்கையில் மிகத்தெளிவான எழுத்தில் கவனமாக மிகவும் சரியாக தயாரித்து முன்வைத்தல் அவசியமானது

❖ **வினாத்தாள் தயாரித்தல் தொடர்பான பொது ஆலோசனைகள்**

## தரம் 6 - 7 தொடர்பானது.

- இவ்விரு தரங்களுக்காகவும் வெவ்வேறான இரு வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.
- இதன் போது போட்டி நடைபெறும் திகதி வரையில் கற்பிக்க திட்டமிடப்பட்டுள்ள பாடப்பகுதிகளில் இருந்து வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும். என்பது கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
- ஒரு வினாப்பத்திரத்தில் உள்ளடங்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை 35 ஆகும்.
- விடையளிப்பதற்காக வழங்கப்பட வேண்டிய நேரம் 01 மணி 15 நிமிடம் ஆகும்.
- வழங்கப்பட வேண்டிய மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

**தரம் 06 வினாப்பத்திரம்**

தரம் 06 வரலாறு, புவியியல் மற்றும் குடியியற்கல்வி பாடத்திட்டங்களை உள்ளடக்கும் வகையில் வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதோடு பொது அறிவு சார்ந்த வினாக்களை தயாரிக்கும் போது சமகால, சமூக, பொருளாதார, அரசியல், கலாசார விளையாட்டு போன்ற பல்வேறு துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

**தரம் 07 வினாப்பத்திரம்**

தரம் 07 வரலாறு, புவியியல், மற்றும் குடியியற்கல்வி பாடத்திட்டங்களை உள்ளடக்கும் வகையில் வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும். என்பதோடு பொது அறிவு சார்ந்த வினாக்களை தயாரிக்கும் போது சமகால சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இதன்படி கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் அவ்வப்பாடப் பகுதிகளுக்கு ஏற்ப புள்ளிகளை வழங்க முடியுமான வகையில் வினாப்பத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

| பாடம் | புள்ளித்திட்டம் | |
|---|---|---|
| | **தரம் 06** | **தரம் 07** |
| வரலாறு | 25 | 25 |
| புவியியல் | 25 | 25 |
| குடியியற் கல்வி | 25 | 25 |
| பொது அறிவு மற்றும் சமகால தகவல்கள் | 10 | 10 |
| புறவுருவப்படம் குறித்தல் (புவியியல் மற்றும் வரலாறு பாடம் தொடர்பான) | 15 | 15 |
| | | |
| **மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை** | **100** | **100** |

தரம் 6 - 7 இரண்டிற்குமான வினாப்பத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய தயாரிக்கப்படல் வேண்டும்.

| வினா எண் | வகை | உள்ளடங்க வேண்டிய பகுதிகள் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1-10 | பல்தேர்வு வினாக்கள் | ஒரு விடை மாத்திரம் சரியானதாக அமையும் வகையில் 4 தெரிவுகளை கொண்டதாக 10 வினாக்கள் அமைதல் வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 20<br>(2x10) |
| 11-15 | சரி பிழை அடையாள மிடல் | வாக்கியத்தில் கூறப்படும் கருத்து தொடர்பில் சரி பிழை அடையாளம் இடல்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10<br>(2x5) |
| 16-20 | இடைவெளி நிரப்புதல் வகை | யாதாயினும் ஒரு விடயமொன்றை விளக்குவதற்காக எழுதப்பட்ட வாக்கியமொன்றில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைப் பயன்படுத்தி வாக்கியத்தை பூரணப்படுத்தல்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10<br>(2x5) |
| 21-25 | சுருக்கமான விடையளித் தல் | • ஒரு வினா இரு பகுதி வினாக்களை கொண்டதாக அமைதல் வேண்டும்.<br>1. படமொன்றை/உருவொன்றை இனங்கண்டு பெயரிடல்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்)<br>2. அப்படத்தை அல்லது உருவை மையமாக கொண்டு கேட்கப்படும் ஒரு வினாவுக்கு சுருக்கமாக விடையளித்தல்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 20<br>(4x5) |
| 26-30 | கட்டமைப்பு கட்டுரை | • ஒரு வினா இரு பகுதி வினாக்களை கொண்டதாக அமைதல் வேண்டும்.<br>1. யாதாயினுமொரு விடயம் தொடர்பாக கேட்கப்படும் வினாவுக்கு சுருக்கமாக விடையளித்தல்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்)<br>2. கேட்கப்பட்ட வினாவுக்குப் பொருத்தமான விடயங்களைக் கொண்டு 3 காரணிகளை எழுதுதல்.<br>(ஒரு விடைக்கு 3 புள்ளிகள் வீதம்) | 25<br>(5x5) |
| 31-35 | புறவுருவப் படம் குறித்தல் | ஆறுகள் அடங்கிய இலங்கை புறவுருவப் படமொன்றில் தரப்பட்டுள்ள இடங்கள் 05 இனை இனங்கண்டு பெயரிடுதல்.<br>(ஒரு விடைக்கு 3 புள்ளிகள் வீதம்) | 15<br>(3x5) |

**தரம் 8 - 9 தொடர்பானது**

- இத்தரங்களுக்காக வெவ்வேறான இரு வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். இதன்போது போட்டி நடைபெறும் திகதி வரையில் கற்பிக்க திட்டமிடப்பட்டுள்ள பாடப்பகுதிகளிலிருந்து வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.
- ஒரு வினாப்பத்திரத்தில் உள்ளடங்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை 40 ஆகும்.
- விடை எழுதுவதற்கு வழங்கப்படும் நேரம் 1 மணி 30 நிமிடங்கள் ஆகும்.
- வழங்கப்பட வேண்டிய புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும்.

**தரம் 08 வினாப்பத்திரம்**

தரம் 08 வரலாறு, புவியியல், மற்றும் குடியியற் கல்வி பாடத்திட்டங் களை உள்ளடக்கும் வகையில் வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதோடு பொது அறிவு சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் கடந்த இரண்டு வருடங்களில் இடம் பெற்ற விஷேட சமகால நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

**தரம் - 09 வினாப்பத்திரம்**

தரம் 09 வரலாறு, புவியியல், மற்றும் குடியியற்கல்வி பாடத்திட்டங்களை உள்ளடக்கும் வகையில் வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதோடு பொது அறிவு சார்ந்த வினாக்களை தயாரிக்கையில் சமகால, சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விளையாட்டுத் துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டியதுடன் கடந்த இரண்டு வருடங்களில் இடம் பெற்ற விஷேட சமகால நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இதன்படி கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் அவ்வப் பாடப்பகுதிகளுக்கு ஏற்ப புள்ளிகளை வழங்க முடியுமான வகையில் வினாப்பத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

| பாடம் | புள்ளித்திட்டம் | |
|---|---|---|
| | தரம் 08 | தரம் 09 |
| வரலாறு | 25 | 25 |
| புவியியல் | 25 | 25 |
| குடியியற் கல்வி | 25 | 25 |
| பொது அறிவு மற்றும் சமகால தகவல்கள் | 10 | 10 |
| புறவுருவப்படம் குறித்தல் (புவியியல் மற்றும் வரலாறு பாடம் தொடர்பான) | 15 | 15 |
| **மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை** | **100** | **100** |

**தரம் 8 - 9 இரண்டிற்குமான வினாப்பத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய தயாரிக்கப்படல் வேண்டும்.**

| **வினா எண்** | **வகை** | **உள்ளடங்க வேண்டிய பகுதிகள்** | **புள்ளிகள்** |
|---|---|---|---|
| 1-5 | பல்தேர்வு வினாக்கள் | ஒரு விடை மாத்திரம் சரியானதாக அமையும் வகையில் 4 தெரிவுகளை கொண்டதாக 05 வினாக்கள் அமைதல் வேண்டும். (ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10 (2x5) |
| 6-10 | தேர்வு வகை | வினாவொன்றுக்கு வழங்கப்பட்டுள்ள சரியான விடைகள் நான்கிலிருந்து மிகச் சரியான விடையை தெரிவு செய்தல். (ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10 (2x5) |

| | | | |
|---|---|---|---|
| 11-15 | இடைவெளி நிரப்புதல் வகை | யாதாயினும் ஒரு விடயமொன்றை விளக்குவதற்காக எழுதப்பட்ட வாக்கியமொன்றில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைப் பயன்படுத்தி வாக்கியத்தை பூரணப்படுத்தல்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10<br>(2x5) |
| 16-20 | சுருக்கமான விடையளித்தல் | நெகிழ்வுத் தன்மை அற்ற நேரடி விடையொன்றினை எழுதுவதற்கு முடியுமான வகையில் வினாக்கள் அமைதல் வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10<br>(2x5) |
| 21-25 | தொடர்பு படுத்தல் | சரியான பொருத்தப்பாடு மற்றும் தெரிவு அடிப்படையில் வினாக்கள் அமைதல் வேண்டும்.<br>• பொருத்தப்பாட்டுக்கு உதாரணமாக விடயம் மற்றும் விளைவு ஒன்றிலொன்று கொண்டுள்ள தொடர்பு, ஒன்று மற்றொன்றில் செல்வாக்கு செலுத்தும் விதம் போன்ற காரணிகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10<br>(2x5) |
| 26-30 | விடை எழுதல் | • ஒரு வினா இரு பகுதி வினாக்களை கொண்டதாக அமைதல் வேண்டும்<br>1. படமொன்றை/உருவொன்றை இனங்கண்டு பெயரிடல்.<br>(ஒரு விடைக்கு 1 புள்ளிகள் வீதம்)<br>2. அப்படத்தை அல்லது உருவை அடிப்படையாக் கொண்டு கேட்கப்படும் ஒரு வினாவுக்கு சுருக்கமாக விடையளித்தல்<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | (3x5)<br>15 |

| | | | |
|---|---|---|---|
| 31-35 | கட்டமைப்பு கட்டுரை | • ஒரு வினா இரு பகுதி வினாக்களை கொண்டதாக அமைதல் வேண்டும்.<br>யாதாயினுமொரு விடயம் தொடர்பாக கேட்கப்படும் வினாவுக்கு சுருக்கமாக விடையளித்தல்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்)<br>கேட்கப்பட்ட வினாவுக்குப் பொருத்தமான விடயங்களைக் கொண்டு 2 காரணிகளை எழுதுதல்<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 20<br>(4x5) |
| 36-40 | புறவுருவப் படம் குறித்தல் | ஆறுகள் அடங்கிய இலங்கைப் புறவுரு வப்படத்தில் தரப்பட்டுள்ள இடங்கள் 05 இனை இனங்கண்டு பெயரிடுதல்<br>• வரலாறு, புவியியல், குடியியற்கல்வி பாடத்துறை சார்ந்த இடங்கள் மற்றும் சமகால முக்கித்துவம்வாய்ந்த இடங்களாக அமைதல் வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 3 புள்ளிகள் வீதம்) | 15<br>(3x5) |

**தரம் 10 - 11 தொடர்பானது**

இத்தரங்களுக்காக வெவ்வேறான இரு வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். இதன்போது போட்டி நடைபெறும் திகதி வரையில் கற்பிக்க திட்டமிடப்பட்டுள்ள பாடப்பகுதிகளிலிருந்து வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும். என்பது கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

- ஒரு வினாப்பத்திரத்தில் உள்ளடங்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை 45 ஆகும்.
- விடை எழுதுவதற்கு வழங்கப்படும் நேரம் 2 மணித்தியாலம் ஆகும்.
- வழங்கப்பட வேண்டிய புள்ளிகளின் எண்ணிக்கை 100 ஆகும்.

**தரம் 10 வினாப்பத்திரம்**

தரம் 10 வரலாறு பாடத்திட்டத்திற்கு அமைவான பாட விடயங்களும், புவியியல், குடியியற்கல்வி, போன்ற பாடத்துறைகள் சார்ந்து தயாரிக்கப்பட்ட பொது அறிவு வினாக்களும், சமகால சமூக,பொருளாதார, அரசியல், கலாசார, விளையாட்டு போன்ற துறைகள் உள்ளடங்கும் வகையில், கடந்த இரண்டு வருடங்களில் இடம் பெற்ற சமகால நிகழ்வுகள் சார்ந்ததுமாக இவ்வினாத்தாள் தயாரிக்கப்படல் வேண்டும்.

**தரம் - 11 வினாப்பத்திரம்**

தரம் 11 வரலாறு பாடத்திட்டத்திற்கு அமைவான பாட விடயங்களும், புவியியல், குடியியற்கல்வி, போன்ற பாடத்துறைகள் சார்ந்து தயாரிக்கப்பட பொது அறிவு வினாக்களும், சமகால சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விளையாட்டு போன்ற துறைகள் உள்ளடங்கும் வகையிலும், கடந்த இரண்டு வருடங்களில் இடம் பெற்ற சமகால நிகழ்வுகள் சார்ந்ததுமாக இவ்வினாத்தாள் தயாரிக்கப்படல் வேண்டும்.

இதன்படி கீழே காட்டப்பட்டுள்ள வகையில் பாடப்பகுதிகளுக்கு ஏற்ப புள்ளிகளை வழங்க முடியுமான விதத்தில் வினாப்பத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும்.

| பாடம் | புள்ளித்திட்டம் | |
|---|---|---|
| | தரம் 10 | தரம் 11 |
| வரலாறு | 30 | 30 |
| புவியியல் (பொது அறிவு சார்ந்த) | 15 | 15 |
| குடியியற் கல்வி (பொது அறிவு சார்ந்த) | 15 | 15 |
| தேசிய மற்றும் சர்வதேச சமகால தகவல்கள் அடங்கிய வினாக்கள் | 20 | 20 |
| புறவுருவப்படம் குறித்தல் | 20 | 20 |
| மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை | 100 | 100 |

**தரம் 10 - 11 இரண்டிற்குமான வினாப்பத்திரங்கள் கீழே தரப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய தயாரிக்கப்படல் வேண்டும்.**

| தொ இல | வினா எண் | வகை | உள்ளடங்க வேண்டிய பகுதிகள் | புள்ளி கள் |
|---|---|---|---|---|
| 01 | 1-10 | பல்தேர்வு வினாக்கள் | ஒரு விடை மாத்திரம் சரியானதாக அமையும் வகையில் 4 தெரிவுகளை கொண்டதாக 05 வினாக்கள் அமைதல் வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 1 புள்ளிகள் வீதம்)<br>வினாவென்றுக்கு வழங்கப்பட்டுள்ள சரியான விடைகள் நான்கிலிருந்து மிகச் சரியான விடையை தெரிவு செய்தல்.<br>(ஒரு விடைக்கு 1 புள்ளிகள் வீதம்) | 10<br>(1x10) |
| 02 | 11-15 | இடைவெளி நிரப்புதல் வகை | யாதாயினும் ஒரு விடயமொன்றை விளக்குவதற்காக எழுதப்பட்ட வாக்கியமொன்றில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைப் பயன்படுத்தி வாக்கியத்தை பூரணப்படுத்தல்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10<br>(2x5) |
| 03 | 16-25 | சுருக்கமான விடை யளித்தல் | • 16 - 20 வரை நெகிழ்வுத் தன்மை அற்ற நேரடி விடையொன்றினை எழுதுவதற்கு முடியுமான வகையில் வினாக்கள் அமைதல் வேண்டும்<br>• 21-25 வரை(1 விடைக்கு 2 புள்ளிகள்) சித்திரம், புகைப்படங்கள், அட்டவணைகள், வரைபுகள், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்படும் வினாக்கள் இரு பகுதி வினாக்களை கொண்டதாக அமைதல் வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 01 புள்ளிகள் வீதம்) | 20<br>(2x10) |

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | 26-30 | தொடர்பு படுத்தல் | சரியான பொருத்தப்பாடு மற்றும் தெரிவு அடிப்படையில் வினாக்கள் அமைதல் வேண்டும்.<br>• பொருத்தப்பாட்டுக்கு உதாரணமாக விடயம் மற்றும் விளைவு, அவற்றுக்கிடையிலான தொடர்பு மற்றும் ஒன்று மற்றொன்றில் செல்வாக்கு செலுத்தும் விதம் போன்ற காரணிகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10<br>(2x5) |
| 05 | 31-35 | கட்டமைப்பு கட்டுரை | • ஒரு வினா மூன்று பகுதி வினாக்களை கொண்டதாக அமைதல் வேண்டும்.<br>பெயரிடல் - (1 புள்ளி)<br>காரணம் கூறல் - (2 புள்ளி)<br>ஆலோசனை மற்றும் கருத்துக்களை முன்வைத்தல் (3 புள்ளி) | 30<br>(6x5) |
| 06 | 36-45 | புறவுருவப் படம் குறித்தல் | ஆறுகள் அடங்கிய இலங்கைப் புறவுருவப்படமொன்றில் 10 இடங்களை குறித்து பெயரிடுதல் வேண்டும்.<br>• வரலாறு, புவியியல், குடியியற்கல்வி பாடத்துறை சார்ந்த இடங்கள் மற்றும் சமகால முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக அமைதல் வேண்டும்.<br>குறித்து பெயரிடுதலுக்காக<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 20<br>(2x10) |

**தரம் 12 / 13**

- இத்தரங்களுக்காக ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும்.
- வினாப்பத்திரத்தில் உள்ளடங்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை 50 ஆகும்.
- விடை எழுதுவதற்கு வழங்கப்படும் நேரம் 2 மணித்தியாலம் 30 நிமிடங்கள் ஆகும்.
- வழங்கப்பட வேண்டிய மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

இவ்வினாத்தாளை தயாரிக்கும் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல், பொருளியல், சமூக,கலாசார, விளையாட்டு மற்றும் சுற்றாடல் போன்ற துறைகள் சார்ந்த பொது அறிவு வினாக்கள் தாயாரிக்கப்பட வேண்டியதோடு கடந்த இரண்டு வருடங்களில் இடம் பெற்ற சமகால முக்கிய நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

| **பாடம்** | **புள்ளித்திட்டம்** |
|---|---|
| | **தரம் 12 / 13** |
| பொது அறிவு :- (வரலாறு, புவியியல், அரசியல், விஞ்ஞானம், தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான முறையியல் சார்ந்ததாக கேட்கப்படும் பொது அறிவு வினாக்களாக அமைதல் வேண்டும்.) | 40 |
| பிரச்சினைகளுக்கான தீர்வு :- (சமூக, பொருளாதார, சுற்றாடல், அரசியல் போன்ற பல்வேறு துறைகளில் தோன்றக்கூடிய பிரச்சினைகளை தீர்த்தல் தொடர்பான வினாக்களாக அமைதல் வேண்டும்.) | 20 |
| தர்க்கவியல் :- (சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த எந்தவொரு பிரச்சினையையும் தர்க்க ரீதியாக சிந்தித்து விடையளிக்கக் கூடிய வகையில் கேட்கப்படும் வினாக்கள் அமைதல் வேண்டும்.) | 15 |
| தொழிலநுட்ப அறிவு மற்றும் திறன் :- கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் போது (தொழினுட்ப கருவிகளின் பயன்பாடு மற்றும் அதனைச் சார்ந்த பிரச்சினைகளை இனங்காணல், பொது வாழ்க்கையில் தொழினுட்ப கருவிகளின் பயன்பாட்டை பெற்றுக் கொள்வதிலுள்ள இயலுமையை அளவிடுதல்). உதாரணம் கணனி தொடர்பாடல் உபகரணங்கள் | 15 |
| தேசிய மற்றும் சர்வதேச தகவல்கள் (இலங்கை மற்றும் உலக தேசப்படக் கல்வி மற்றும் குறித்தல், பெயரிடல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.) | 10 |
| **மொத்த புள்ளிகளின் எண்ணிக்கை** | **100** |

தரம் 12/13 இரண்டிற்குமான வினாப்பத்திரம் கீழே காட்டப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைய தயாரிக்கப்படல் வேண்டும்.

| வினா எண் | வகை | உள்ளடங்க வேண்டிய பகுதிகள் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1-10 | பல்தேர்வு வினாக்கள் | 1 - 5 வரை ஐந்து தேர்வுகளில் சரியான விடையை தெரிதல் வகை (ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்)<br>6 -10 வரையான வினாக்கள், ஐந்து தேர்வுகளில் சரியான விடைத்தொகுதியை தெரிதல் வகையாக அமைதல் வேண்டும். (ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 20 (2x10) |
| 11-15 | இடைவெளி நிரப்புதல் வகை | வாக்கியமொன்றின் கருத்துக்களை உள்வாங்கி பொருள் விளங்கும் வகையில் இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை எழுதுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10 (2x5) |
| 16-25 | சுருக்கமான விடை யளித்தல் | • 16 - 20 வரை நெகிழ்வுத் தன்மை அற்ற நேரடி விடையொன்றினை எழுதுவதற்கு முடியுமான வகையில் வினாக்கள் அமைதல் வேண்டும் (ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்)<br>• 21 - 25 வரை சித்திரம், நிழற்படம், அட்டவணைகள், வரைபுகள், என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்படும் வினாக்கள் இரு பகுதி வினாக்களை கொண்டதாக அமைதல் வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 20 (2x10) |

| | | | |
|---|---|---|---|
| 26-30 | தொடர்பு படுத்தல் | • விடயங்கள், விளக்கங்களை பொருத்துதல் இதன் மூலம் எதிர்பார்க்க ப்படுகின்றது ஒன்றோடொன்றை ஒப்பிடுதல், நிகழ்வொன்றின் விளைவை ஒப்பிடுதல், போன்ற விடயங்கள் இதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 2 புள்ளிகள் வீதம்) | 10<br>(2x5) |
| 31-35 | கட்டமைப்பு கட்டுரை | • ஒரு வினா மூன்று பகுதி வினாக்களை கொண்டதாக அமைதல் வேண்டும்.<br>I பெயரிடல் - (1 புள்ளி)<br>II இரு காரணிகளை முன்வைத்தல் - (2 புள்ளி)<br>III அதில் ஒரு காரணியை விரிவாக விளக்குதல் (2 புள்ளி) | 25<br>(5x5) |
| 36-45 | புறவுருவப் படம் குறித்தல் I | ஆறுகள் அடங்கிய இலங்கைப் தேசப்படத்தை அடிப்படையாகக் கொண்டு 10 இடங்களை குறித்தல் வேண்டும். இவை பாடத்தோடிணைந்த எனினும் இலங்கை தொடர்பான பொதுத் தகவல்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட இடங்களாக இருத்தல் வேண்டும்.<br>(ஒரு விடைக்கு 1 புள்ளி வீதம்) | 10<br>(1x10) |
| 46-50 | புறவுருவப் படம் குறித்தல் II | உலகப் புறவுருவப்படத்திலுள்ள 5 இடங்கள் தொடர்பானதாக கேட்கப்படும் வினாக்கள் அமைதல் வேண்டும். பொது அறிவை மதிப்பிடும் வகையில் இவை தயாரிக்கப்படல் வேண்டும்.<br>(இனங்காணப்பட்ட இடங்கள் குறித்துக் காட்டப்படல் வேண்டும்.)<br>(1 வினாவுக்கு 1 புள்ளி வீதம்) | 05<br>(1x5) |

எல்லா வினாத்தாள்களிலும் முதல் பக்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளடங்க வேண்டும்.

.......................................... சமூக விஞ்ஞான போட்டித் தொடர் 20.........

தரம் : ................................

பரீட்சை சுட்டெண் : ..................................
(பெயர் எழுதுவதை தவிர்க்கவும்)

கவனத்திற்கு
சகல வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.

| விடைத்தாள் மதிப்பீட்டாளர்களின் உபயோகத்திற்கு மாத்திரம் | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் | புள்ளிகள் | 1ம் பரீட்சகரின் கையொப்பம் | |
| 1 - 10 | | | |
| 11 - 15 | | 2ம் பரீட்சகரின் கையொப்பம் | |
| 16 - 25 | | | |
| 26 - 30 | | மொத்தப் புள்ளிகள் | |
| 31 - 35 | | | |
| 36 - 40 | | | |
| 41 - 45 | | | |
| 46 - 50 | | | |

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

**தரம் - 06**

**மாதிரி வினாக்கள்**

- ❖ வினா இல 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் இருந்து சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. மகாநாம தேரரால் எழுதப்பட்ட இலங்கையின் வரலாற்றை கற்பதற்கு துணைபுரியும் முக்கிய இலக்கிய மூலாதாரமாக அமைவது பின்வருவன வற்றுள் எது?

   i. தீபவம்சம் ii. போதி வம்சம்
   iii. மகாவம்சம் iv. நிகாய சங்கிரஹய

2. இலங்கையின் நிர்வாக கட்டமைப்பின் படி மிகவும் சிறிய நிர்வாக அலகு பின்வருவனவற்றுள் எது?

   i. மாகாணம் ii. மாவட்டம்
   iii. பிரதேச செயலாளர் பிரிவு iv. கிராம உத்தியோகத்தர் பிரிவு

3. திட்டமிடல் மட்டும் ஒழுங்கமைப்பு காரணமாக எமக்கு கிடைக்கும் மிக முக்கிய நன்மைகளுள் ஒன்றாக அமைவது.

   i. தமது குறிக்கோள்களை இலகுவில் பூர்த்தி செய்து கொள்ள முடியும்
   ii. மற்றவர்களுக்கு இடையூராக இல்லாதிருத்தல்
   iii. மற்றவர்களின் பாராட்டுதல்களுக்கு உட்படுதல்
   iv. தாமதத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் குறைவடைதல்

4. இலங்கையின் பொதுத் தொலைபேசி இலக்கத்தொடரிலுள்ள இலக்கங்களின் எண்ணிக்கை யாது?

   i. ஒன்பது ii. பன்னிரெண்டு
   iii. பத்து iv. பதின்மூன்று

❖ இல 11 முதல் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் "✓"எனும் அடையாளத்தையும் பிழை எனின் "✗" எனும் அடையாளத்தையும் முன்னால் உள்ள அடைப்புக்குள் இடுக.

1. உலகின் மிகப் பழமையான எழுத்துக்கலை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது மொசப்பெத்தேமிய வாசிகளால் ஆகும்.

( )

2. கிழக்கு மற்றும் வடக்கு திசைகளுக்கிடையே தென்மேற்கு திசை அமைந்துள்ளது.

( )

3. நகரமயமாக்கப்பட்ட சுற்றாடல் தொடர்பான அதிகாரப் பிரதேசம் மாநகர சபையாகும்.

( )

4. இலங்கைச் சாரதியொருவர் வாகனமொன்றை செலுத்த வேண்டியது வலது பக்கத்திலாகும்.

( )

❖ 16 முதல் 20 வரையான வினாக்களுக்கு சரியான விடையை கொண்டு இடைவெளி நிரப்புக.

1. இலங்கையில் அதிக மாவட்டங்களை கொண்டுள்ள மாகாணம் ...................... ஆகும்.

2. திசையை சரியாக இனங்கண்டு கொள்வதற்காக ..................................... கருவி பயன்படுத்தப்படுகின்றது.

3. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் குறுகிய கடற்பரப்பு .................... நீரிணை எனப்படும்.

4. எகிப்து நாகரீகத்தில நீண்ட கால ஆட்சி நடவடிக்கைகளை மேற் கொண்டது. .................................................................. எனும் அரச வம்சம் ஆகும்.

❖ 21 முதல் 25 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்குக.



01) இவ்வுருவினால் காட்டப்படும் மனித வர்க்கத்தைப் பெயரிடுக?

............................................................

02) இம்மனித வர்க்கத்திற்கு உரிய மக்கள் வாழும் நாடொன்றின் பெயரைக் குறிப்பிடுக

............................................................




01) இவ்வுருவினால் காட்டப்படும் கருவியை பெயரிடுக

............................................................

02) இக்கருவி தொடர்பில் பயன் படுத்தப்படும் அளவீட்டு அலகு எது?

............................................................



01) இவ்வுருவினால் காட்டப்படும் வீதிக் குறியீட்டினால் குறிப்பிடப்படுவது யாது?

............................................................

02) பெருவீதி ஒன்றில் வாகன சாரதியொருவர் இவ்வீதி குறியீட்டைக் கண்டவுடன் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றினை குறிப்பிடுக.

............................................................

❖ இல 26 முதல் 30 வரை உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

1.

1. அநுராதபுரத்தை நகரமாக மாற்றி அதனை தனது ஆட்சி மையமாக்கிக் கொண்ட அரசரைப் பெயரிடுக?

   ……………………………………………………………

2. இவரால் அநுராதபுர நகரின் பாதுகாப்பு மற்றும் அலங்காரம் கருதி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………
   ……………………………………………………………
   ……………………………………………………………

2.

1. பாடசாலையொன்றின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் குறியீடொன்றினைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………

2. பாடசாலை மரபுகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் பாதுகாத்தல் ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு காரணங்களை குறிப்பிடுக?

   ……………………………………………………………
   ……………………………………………………………

3.

1. பாடசாலை மாணவன் என்ற வகையில் நீர் பெற்றுக் கொள்ளும் சேவை யொன்றினை குறிப்பிடுக.

   ……………………………………………………………

2. பொதுச்சேவைகளை பெற்றுக்கொள்ளும் உம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………
   ……………………………………………………………
   ……………………………………………………………

❖ இல 31 முதல் 35 வரை காட்டப்பட்டுள்ள இடங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.?

1. கொழும்பு
2. அநுராதபுரம்
3. மகாவலி கங்கை
4. சிவனொளிபாதமலை
5. யாழ் குடாநாடு

**கவனத்திற்கு** :-

குறிப்பிட்ட சில இடங்கள் மாத்திரமே இங்கு தரப்பட்டுள்ளன. தரம் 6 வரலாறு/ புவியியல்/ குடியியற் கல்வி பாடத் திட்டங்களுக்கு உரிய பாட அலகுகளில் தரப்பட்டுள்ள இடங்களிலிருந்து 31 - 35 வரையான வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

## தரம் 07

## மாதிரி வினாக்கள்

❖ வினா இல 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. கலா ஓயாவை அண்டி அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கம் பின்வருவனவற்றுள் எது?

   i. இராஜாங்கணை    ii. மாதுருஓயா
   iii. உடவளவை    iv. லுணுகம்வெஹெர

2. உலகின் கண்டங்களுள் பரப்பளவில் சிறிய கண்டம் பின்வருவனவற்றுள் எது?

   i. ஆசியா    ii. ஆபிரிக்கா
   iii. அவுஸ்திரேலியா    iv. ஐரோப்பா

3. உமது தாயின் சகோதரரின் மனைவி உமக்கு என்ன உறவு முறை

   i. சித்தி    ii. அண்ணி
   iii. மாமி    iv. பெரியம்மா

4. சுகாதாரத்துறைக்கு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட “சுவசெரிய” அம்பியூலன்ஸ் சேவையை பெற்றுக் கொள்ள அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் யாது?

   i. 119    ii. 1919
   iii. 1916    iv. 1990

❖ இல 11 முதல் 15 வரை தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் "✓" எனும் அடையாளத்தையும் பிழையாயின் "✗" எனும் அடையாளத்தையும் முன்னால் உள்ள அடைப்புக்குறிக்குள் இடுக.

1. யுனெஸ்கோ அமைப்பினால் இலங்கையின் கலாசார மரபுரிமைக் குரிய ஆறு இடங்கள் உலக உரிமைகளாக பெயரிடப்பட்டுள்ளன.

   ( )

2. தெற்காசிய நாடுகளுள் கூடிய ஆயுள் எதிர்பார்க்கையை கொண்ட நாடு இலங்கையாகும்.

   ( )

3. பெற்றோர் மற்றும் பிள்ளைகளை மாத்திரம் உள்ளடக்கிய குடும்பம் கருக்குடும்பம் ஆடும்.

   ( )

4. இலங்கையில் இடி, மின்னல் தாக்கம் ஏற்படுவது அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மாத்திரமாகும்.

   ( )

❖ இல 16 முதல் 20 வரையான வினாக்களுக்கு சரியான விடையைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

1. நீர்ப்பாசனத்திற்கு ஆற்றிய மகத்தான சேவை காரணமாக .................................. மன்னன் மின்னேரிய தெய்வம் என போற்றப்பட்டான்.

2. புவியின் உட்புறத்தே உள்ள அதிக வெப்பம் மற்றும் அமுக்க மாற்றங்கள் காரணமாக திடீரென ஏற்படும் பூமியின் அதிர்வு .................................................... எனப்படும்.

3. நபரொருவரை விஷேடமாக அடையாளம் காண பயன்படுத்தப்படும் பொருத்தமான பரிசோதனை முறையாக அமைவது................................ ...................... கட்டமைப்பு தொடர்பான பரிசோதனையாகும்.

4. இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்ற மாந்தோட்டத் துறைமுகம் தற்போது ........................................................... என அழைக்கப்படுகின்றது.

❖ இல. 21 முதல் 25 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்குக.



01) இப்படத்தினால் காட்டப்படுவது யாது?

............................................................

02) இந் நிர்மாணத்தை ஆக்கிய மன்னன் யார்?

...............................................................



01) இப்படத்தினால் காட்டப்படும் தாவர வகையைப் பெயரிடுக

............................................................

02) இத்தாவர வகையை அதிகமாக காணமுடிவது எப்பிரதேசங்களுக்கு அருகாமையிலாகும்.

............................................................

❖ இல. 26 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

1.

I. அனுராதபுர யுகத்தில் அரசுரிமை உரித்தான விதம் தொடர்பாக பின்பற்றப்பட்ட முறைகளுள் ஒன்றினை குறிப்பிடுக?

……………………………………………………………

II. அனுராதபுரக் கால அரசரொருவருக்கு உரிய பிரதான கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

……………………………………………………………
……………………………………………………………
……………………………………………………………

2.

I. மக்கள் சமூகம் ஒன்றில் பிரஜையொருவருக்கு உரிய மூன்று உரிமைகளுள் ஒன்றினைக் குறிப்பிடுக?

……………………………………………………………

……………………………………………………………

II. மேலே குறிப்பிட்டப்பட்ட உரிமைக்கு மூன்று உதாரணங்கள் தருக.

……………………………………………………………

……………………………………………………………

3.

I. மண்சரிவு அபாயம் அதிகரிப்பதில் செல்வாக்கு செலுத்தும் மனித நடவடிக்கையொன்றினை குறிப்பிடுக?

……………………………………………………………

II. மண்சரிவு அபாயத்தை தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

……………………………………………………………

……………………………………………………………

……………………………………………………………

❖ இல. 31 முதல் 35 வரை காட்டப்பட்டுள்ள இடங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.?

1. தெதுறு ஓயா
2. கம்பளை
3. திருகோணமலை
4. நக்கிள்ஸ் மலை
5. மன்னார் தீவு

**கவனத்திற்கு :-**

குறிப்பிட்ட சில இடங்கள் மாத்திரமே இங்கு தரப்பட்டுள்ளன. தரம் 7 வரலாறு/ புவியியல்/ குடியியற்கல்வி பாடத்திட்டங்களுக்கு உரிய பாட அலகுகளில் தரப்பட்டுள்ள இடங்களிலிருந்து 31 - 35 வரையான வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

## தரம் 08

## மாதிரி வினாக்கள்

❖ வினா இல 1 முதல் 05 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. இந்நாட்டில் பாரிய குளங்களை கட்டும் பணியை ஆரம்பித்து வைத்த மன்னனாக கருதப்படுபவர்

| | |
|---|---|
| 1. மகா பராக்கிரமபாகு | 3. வசபன் |
| 2. தாது சேனன் | 4. மகா சேனன் |

2. தென்னாசிய வலய நாடுகளுள் மலைநாட்டு நிலத்தோற்ற பண்புகளை காணமுடியாத நாடு?

| | |
|---|---|
| 1. இலங்கை | 3. நேபாளம் |
| 2. இந்தியா | 4. மாலைத்தீவு |

2. தென்னாசிய வலயநாடுகள் இணைந்து உருவாக்கிக் கொண்டுள்ள சார்க் அமைப்பில் அங்கத்துவம் பெற்றுள்ள நாடுகள் எத்தனை?

| | |
|---|---|
| 1. ஏழு | 3. ஒன்பது |
| 2. எட்டு | 4. பத்து |

4. 2016ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற நாடு பின்வருவனவற்றுள் எது,

| | |
|---|---|
| 1. பிரேசில் | 3. கிறீஸ் |
| 2. நியூசிலாந்து | 4. ஜப்பான் |

❖ 6 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து மிகவும் பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. பண்டைய இலங்கையில் உயரிய நீரியல் தொழிநுட்பம் நிலவியமை உறுதிப்படுத்தப்படுவதிலிருந்து வெளிப்படுவது யாதெனில்

    1. உண்ணாட்டு, வெளிநாட்டு தொடர்புகள் உயரிய மட்டத்தில் நிலவி இருந்தமையாகும்.
    2. இலங்கையில் நீர்ப்பாசன தொழினுட்பவியலாளர்களிடையே உயரிய தொழிநுட்ப அறிவு இருந்துள்ளமை.
    3. விவசாய வேலைகளுக்காக நீர் வழங்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை.
    4. இலங்கையில் இயற்கை வளங்கள் அதிகம் காணப்பட்டுள்ளமை.

2. சுற்றாடல் பாதுகாப்பை இலக்காக் கொண்டு தோற்றுவிக்கப்பட்ட நிறுவன மொன்றாக அமைவது

    1. ஜனசவிய நிகழ்ச்சித் திட்டம்
    2. மத்திய சுற்றாடல் அதிகார சபை
    3. அனைவருக்கும் புகழிடம் நிகழ்ச்சித்திட்டம்
    4. கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டம்

3. குடும்பம் ஒன்றினுள் நாம் ஜனநாயக ரீதியில் நடந்து கொள்ள வேண்டியது.

    1. பெற்றோருக்கு மதிப்பளிக்க வேண்டியுள்ளதனால் ஆகும்.
    2. குடும்பம் என்ற வகையில் நிறைவான வாழ்க்கை வாழ்வதற்காகும்.
    3. சமூகத்தில் ஏனையோருக்கு முன்மாதிரியை வழங்குவதற்காகும்.
    4. அங்கத்தவர்களின் பொறுப்பாக அமைவதினாலாகும்.

4. "புத்தகங்களின் பக்கங்களுக்கிடையே யதார்த்தமான மனிதர்கள் வாழ்கின்றார்கள்" இக்கூற்றை வெளிப்படுத்தியவர் யார்?

    1. பிரான்சில் பேகன்
    2. தோரோ
    3. ஈ எம் போஸ்டர்
    4. ரிச்சட் ஸ்டீல்

❖ இல. 11 முதல் 15 வரையான வினாக்களின் இடைவெளிக்குப் பொருத்தமான சரியான விடையைக் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. மினிப்பே கால்வாய் ...................................... மன்னனின் நிர்மாணிப்பாகும்.

2. இலங்கையில் அதிகூடிய மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறுவது .................. .................................. பிரதேசத்திலாகும்.

3. சர்வதேச நீர் முகாமை மத்திய நிலையம் அமைந்துள்ள நாடாக அமைவது .................................................. ஆகும்.

4. “ஆசியாவின் வெள்ளி மணி” எனும் விருதினைப் பெற்ற இலங்கையின் பிரதமர் ................................................... ஆவார்.

❖ இல. 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடையளிக்க.

1. தெடிகம கொட்டவெஹெர தூபியை நிர்மாணித்த மன்னனின் பெயரைக் குறிப்பிடுக? ................................................................................

2. சுலைமான் மலை அமைந்துள்ள நாடு எது? ..........................................

3. இலங்கையில் பிள்ளைகளுக்கான கட்டாயக் கல்விக்குரிய வயதெல்லை யாது ? .........................................

4. “ஆயிரம் ஏரிகளின் நாடு” என அழைக்கப்படும் நாடு எது? ………………………………………………………………

❖ இல. 21 முதல் 25 வரை வழங்கப்பட்டுள்ள வினாக்களுக்கு "அ" மற்றும் "ஆ" என்னும் இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பொருத்தபாட்டுக்கு அமைய எழுத்துக்களை இணைத்து தரப்பட்டுள்ள சரியான விடையின் கீழ் கோடிடுக.

1.

| "அ" நிரல் | "ஆ" நிரல் |
|---|---|
| i. மகாவிலச்சிய | A. தாதுசேனன் |
| ii. கலாவாவி | B. பண்டுகாபயன் |
| iii. அபய வாவி | C. மகாசேனன் |
| iv. மின்னேரியா குளம் | D. வசபன் |

1. DABC 2. ABDC 3. BCDA 4. DACB

2.

| "அ" நிரல் | "ஆ" நிரல் |
|---|---|
| i. வெள்ளி | A. செங்கோள் |
| ii. புவி | B. சிறுகோள் |
| iii. செவ்வாய் | C. நீலக்கோள் |
| iv. புளூட்டோ | D. விடிவெள்ளி |

1. ABDC 2. BADC 3. DABC 4. DCAB

3.

| "அ" நிரல் | "ஆ" நிரல் |
|---|---|
| 1. வெசாக் பண்டிகை | A. இந்து |
| 2. தீபாவளி | B. இஸ்லாம் |
| 3. பாஸ்கு பண்டிகை | C. பௌத்தம் |
| 4. ஹஜ் பண்டிகை | D. கத்தோலிக்கம் |

1. ACDB 2. CADB 3. BDCA 4. CDBA

4.

| "அ" நிரல் | "ஆ" நிரல் |
|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்கா குடியரசு | A. டாக்கா |
| 2. ஜப்பான் | B. கத்மண்டு |
| 3. பங்களாதேஷ் | C. நிவ்யோர்க் |
| 4. நேபாளம் | D. டோக்கியோ |

1. ACBD 2. BCAD 3. DCBA 4. CDAB

❖ இல. 26 முதல் 30 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.



01). இப்படத்தினால் காட்டப்படுவது யாது?

.............................................................

02). இந் நிர்மாணம் உருவாக்கப்பட்டு - ள்ளதன் நோக்கம் யாது?

.............................................................



03). இப்படத்தினால் காட்டப்படுவது எவ்வகை பருவ காலம் ஆகும்.

.............................................................

04.) இப்பருவ காலத்தில் காணக்கூடிய சூழற் பண்பொன்றினை குறிப்பிடுக.

.............................................................

3. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள வீதிக் குறியீடுகளினால் குறிப்பிடப்படுவது யாது?





........................................ ........................................

❖ இல. 31 முதல் 35 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.

1.

I. சீகிரிய நீர்ப்பூங்கா தொடர்பில் தகவல் வெளிக் கொணர்ந்த இலங்கை தொல்பொருள் ஆய்வாளர் யார்?

..........................................................................................................

II. பண்டைய நீர்ப்பூங்காக்களில் காணக்கூடிய சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

..........................................................................................................

..........................................................................................................

2.

I. இலங்கையில் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக செயற்படும் நிறுவனமொன்றினைப் பெயரிடுக?

..........................................................................................................................

II. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனத்திற்கு அமைய உரிமைகள் 4 தலைப்புக்களின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன அவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக?

..........................................................................................................................

❖ 36 முதல் 40 வரை தரப்பட்டுள்ள இடங்களை உமக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

1. சீகிரியா
2. கண்டி
3. தேவேந்திர முனை
4. காலி
5. மன்னார் தீவு

**கவனத்திற்கு:-**

குறிப்பிட்ட சில இடங்கள் மாத்திரமே இங்கு தரப்பட்டுள்ளன. தரம் 8 வரலாறு/ புவியியல்/ குடியியற் கல்வி பாடத் திட்டங்களுக்கு உரிய பாட அலகுகளில் தரப்பட்டுள்ள இடங்களிலிருந்து 36 - 40 வரையான வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

## தரம் 9

## மாதிரி வினாக்கள்

❖ இல. 1 முதல் 5 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் இருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. இலங்கையின் கரையோர பிரதேசங்களை கைப்பற்றுவதில் முன்னோடியாக திகழ்ந்த பிரித்தானிய ஆளுனர் பின்வருவோரில் யார்?

    1. பெட்ரிக்நோத்  3. தோமஸ் மெயிட்லாண்ட்
    2. ரொபேட் பிரவுண்றிக்  4. எட்வட் பாண்ஸ

2. ஆசிய வலயத்தின் சன அடர்த்தி மிக்க பிராந்தியமாக அமைவது?

    1. வட ஆசியா  3. கிழக்காசியா
    2. மத்திய ஆசியா  4. தென்கிழக்காசியா

3. பல்வகைப்பட்ட அறிவு சார் கோட்பாட்டை முன்வைத்தவர் யார்?

    1. சிக்மெண்ட் புரொய்ட்  3. தோண்டைக்
    2. ஹொவாட் காணர்  4. ஜெகான் கல்டுங்

4. ‘‘மக்சேசே’’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இலங்கை இசைக்கலைஞர் யார்?

    1. விக்டர் ரத்னாயக்க
    2. பிரேமசிரி கேமதாச
    3. ஸ்ரீதர் பிச்சையப்பா
    4. W.D. அமரதேவ அவர்கள்

❖ இல. 6 முதல் 10 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. இலங்கை மீது பிரித்தானியரின் கவனம் திரும்பியமைக்கு பிரதான காரணியாக அமைவது?
   1. இலங்கையின் அமைவிடம்
   2. இலங்கையின் கறுவாவை பெற்றுக்கொள்ளல்
   3. திருகோணமலை துறைமுகத்தின் அமைவிட முக்கியத்துவம்
   4. பருவக்காற்று காலங்களில் கப்பல்களை பாதுகாப்பாக நிறுத்தி வைக்க முடிந்தமை.

2. புவியின் வெப்பநிலை அதிகரித்துச் செல்வதில் பிரதானமாக செல்வாக்குச் செலுத்தும் வாயு வகை பின்வருவனவற்றுள் எது?
   1. மிதேன்      3. ஆகன்
   2. ஒட்சிசன்      4. குளோரோ புளோரோ காபன்

3. தேர்தல் தொடர்பில் மக்களின் பிரதான கடமையாக அமைவது?
   1. எதிர்பார்க்கும் அரசியல் கட்சியை வெற்றிபெறச் செய்வதற்கான பங்களிப்பை வழங்கல்.
   2. நாட்டின் நலன்கருதி சேவையாற்றக்கூடிய ஆட்சியாளர்களை தெரிவு செய்வதற்காக வாக்குரிமையை பயன்படுத்தல்.
   3. தேர்தல் வேட்பாளராக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடல்
   4. அரசியல் கட்சியொன்றில் அங்கத்துவம் பெற்றுக் கொள்ளல்.

❖ இல. 11 முதல் 15 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை எழுதுக.

1. "தேசத்தின் தந்தை" என இந்திய மக்கள் மத்தியில் பிரபலமானவர் ………………………………… ஆவார்.
2. 2012 குடிசன மதிப்பீட்டின் படி இலங்கையின் மொத்த சனத்தொகை …………………………… மில்லியனாகும்.
3. இலங்கையின் நடைமுறையில் உள்ள யாப்பின் கீழ் செயற்படுத்தப்படும் நேரடி ஜனநாயக உத்தியாக அமைவது ………………………………… ஆகும்.
4. 2020 ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுசரணை வழங்கும் நாடு ……………………………………… ஆகும்.

❖ இல. 16 முதல் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1. டொனமூர் யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நிர்வாகக் குழு முறைமையின் கீழ் விவசாயம் மற்றும் காணி அமைச்சராக பதவி வகித்தவர் யார்?

   ……………………………………………………………

2. உலகில் உள்ள துறைமுகங்களில் மிகப் பெரிய செயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள நாடு எது?

   ……………………………………………………………

3. சர்வதேச அங்கீகாரம் மிக்க தொழிற்பயிற்சியொன்றை பெற்றுள்ளமையை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை அரசினால் வழங்கப்படும் சான்றிதழ் எது?

   ……………………………………………………………

❖ இல. 21 முதல் 25 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ''அ'' மற்றும் ''ஆ'' எனும் இரு நிரல்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பொருத்தப்பாட்டிற்கு அமைய சரியான எழுத்தை தொடர்புபடுத்தி பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

| ''அ'' நிரல் | ''ஆ'' நிரல் |
|---|---|
| 1. இலங்கையின் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றல் | A. டொரின்டன் பிரபு |
| 2. இரண்டாவது சுதந்திர போர் | B. வீரபுரன் அப்பு |
| 3. உடல் வரி | C. ஜோன் டொயிலி |
| 4. ஆளுனரின் கண்டி வதிவிட பிரதிநிதி | D. ரொபட்பிரவுன்றிக் |

1. BADC    2. ABDC    3. DBAC    4. DACB

2.

| ''அ'' நிரல் | ''ஆ'' நிரல் |
|---|---|
| 1. மாலே | A. ஜப்பான் |
| 2. டோக்கியோ | B. நேபாளம் |
| 3. காத்மண்டு | C. மாலைதீவு |
| 4. டாக்கா | D. பங்களாதேஷ் |

1. DABC    2. CABD    3. ABCD    4. CADB

❖ இல. 26 முதல் 30 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1.



01) இப்படத்தில் காட்டப்படுபவர் யார்?

……………………………………

02) இவர் ஜனாதிபதியாக பதவி வகித்த நாடு எது?

……………………………………

2.



01) இப்படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் யார்?

……………………………………

02) இவர் ஆற்றிய சேவைகளுள் ஒன்றைக் குறிப்பிடுக.

……………………………………

3.



01) படத்தில் காட்டப்பட்டுள்ள நிலத்தோற்றம் யாது?

……………………………………

02) இந் நிலத்தோற்றத்தில் காணக்கூடிய சூழற் பிரச்சினையொன்றினைக் குறிப்பிடுக?

……………………………………

❖ இல. 31 முதல் 35 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

1.

1. ஒல்லாந்தரின் இந்திய வருகையுடன் கம்பனிகள் பலவற்றை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட கம்பனியை பெயரிடுக.

   ……………………………………………………………

2. இக் கம்பனி கிழக்குப் பிராந்தியத்திற்கு வந்து தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்ட இரு நாடுகளைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………

2.

1. சார்க் நாடுகளுள் உயர்ந்த மானிட அபிவிருத்தியைக் கொண்ட நாடு எது?

   ……………………………………………………………

2. அபிவிருத்தியை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் மானிட அபிவிருத்திக் குறிகாட்டிகள் தவிர்ந்த வேறு இரு நவீன அளவீடுகளைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………

   ……………………………………………………………

❖ இல. 35 முதல் 40 வரை தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் புறவுருவப் படமொன்றில் குறித்துப் பெயரிடுக.

1. திருகோணமலை
2. விக்டோரியா நீர்த்தேக்கம்
3. மாதுரு ஓயா
4. களுகங்கை
5. கிரிந்த

**கவனத்திற்கு:**

இங்கு சில இடங்கள் மாத்திரமே தரப்பட்டுள்ளன. தரம் 9 வரலாறு புவியியல் குடியியற்கல்வி பாடத்திட்டங்களுக்கு உரிய பாட அலகுகளில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலிருந்து 35 முதல் 40 வரையான வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

## தரம் 10

## மாதிரி வினாக்கள்

❖ இல. 1 முதல் 5 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் இருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. இலங்கையின் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களுள் மிகவும் பழமை வாய்ந்த நூலாக கருதப்படுவது எது?

    1. தீபவம்சம் 2. போதிவம்சம்
    3. மகாவம்சம் 4. தூபவம்சம்

2. கீழே தரப்பட்டுள்ள கனியங்களுள் எரிபொருள் கனியம் ஒன்றாக அமைவது?

    1. காரீயம் 2. மக்னீசியம்
    3. பொஸ்பேற்று 4. நிலக்கரி

3. குளோரோ புளோரோ காபன் (CFC) கலப்பினால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாரிய பாதிப்பாக அமைவது?

    1. முருகைக்கற்பாறைகள் அழிவடைதல்
    2. ஓசோன் படையில் துளை விழுதல்
    3. நீர் வாழ் உயிரினங்கள் அழிவடைதல்
    4. அமில மழை பெய்தல்

4. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற 21 வது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்த நாடு எது?

    1. ஜெர்மனி 2. பிரான்ஸ்
    3. குரேஷியா 4. ரஷ்யா

❖ 6 முதல் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள சரியான விடைகளுள் இருந்து மிகச் சரியான விடையை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

1. இலங்கை வரலாற்றில் துட்டகைமுனு மன்னன் சிறப்பிடம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் பிரதான காரணியாக அமைவது?

    1. விகாரைகளை நிர்மாணித்தல்
    2. முதல் தடவையாக இலங்கையை ஒன்றுபடுத்தியமை
    3. நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தியமை
    4. சமூக நலன்புரி சேவைகளை ஆற்றியமை

2. மண்சரிவு ஏற்படுவதில் செல்வாக்கு செலுத்தும் மானிடக் காரணிகளுள் மிக முக்கிய காரணியாக அமைவது?

    1. பெருந்தெருக்கள் நிர்மாணிப்பு
    2. வீடுகள் நிர்மாணிப்பு
    3. நீர் மின் உற்பத்தி நிலையங்கள் உருவாக்கம்
    4. சரிவான இடங்களை அண்டி பயிர்ச்செய்கையினை மேற்கொள்ளல்

3. ஜனநாயகம் வெற்றி பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் மிகவும் முக்கிய காரணியாக அமைவது?

    1. அரசியல் கட்சிகள் காணப்படுதல்
    2. தேர்தல் நடாத்தப்படல்
    3. சர்வஜன வாக்குரிமை காணப்படல்
    4. எதிர்கட்சிகள் காணப்படல்

❖ இல. 11 முதல் 15 வரையான வினாக்களுக்கு இடைவெளிக்கு மிகவும் பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. முன்வரலாற்று காலத்தில் மட்பாண்டங்களில் அஸ்தியை இட்டு மண்ணில் புதைத்து அதன் மீது அமைக்கப்பட்ட மயானம் …………………………….. என அழைக்கப்படும்.

2. சகல கரையோர அரசுகளினதும் கரையோர எல்லையில் இருந்து 12 கீ.மீ வரையிலான கடல் எல்லை ……….................…………………… எனப்படும்.

3. மனித உரிமைகளை வென்றெடுப்பதற்காக பிரித்தானியாவில் 1215 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது ………..........................………………… ஒப்பந்தமாகும்.

❖ இல. 16 முதல் 20 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1. குளத்து நீரின் அமுக்கத்தை கட்டுப்படுத்தி நீரை திறந்து விடுவதற்காக அமைக்கப்பட்ட குளத்தின் கூறு யாது.

………………………………………………………………

2. இலங்கை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மற்றும் மாகாண சபைகளுக்கிடையிலான இடைத்தொடர்பை ஏற்படுத்தும் நபரை குறிப்பிடுக.

…………………………………………………………

3. 2017ம் ஆண்டு அணுவாயுத பரிசோதனைகள் பலவற்றை நிகழ்த்தி உலக சமாதானத்திற்கு சவாலை ஏற்படுத்திய வடகொரிய ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிடுக.

……………………………………………………………

❖ இல. 21 முதல் 25 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1.



1. இவ்வுருவினால் காட்டப்படும் ஆக்கம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தினைப் பெயரிடுக.

………………………………………

02. இதன் இயக்கப்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ள விஞ்ஞான தொழில்நுட்ப முறை எது?

………………………………………

2.



01. இக் குறியீடு எத்துறை சார்ந்ததாகப் பயன்படுத்தப்படுகிறது?

………………………………………

02. இக் குறியீடு வெளிப்படுத்தும் கருத்து யாது?

………………………………………

❖ இல. 26 முதல் 30 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ''அ'' மற்றும் ''ஆ'' எனும் இரு நிரல்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பொருத்தப்பாட்டிற்கு அமைய சரியான எழுத்தை தொடர்புபடுத்தி பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

| ''அ'' நிரல் | ''ஆ'' நிரல் |
|---|---|
| 1. ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்பதாவது செயலாளர் நாயகம் | A. கமால் அப்துல் நாசர் |
| 2. சுயஸ் கால்வாய் மக்கள் மயப்படுத்தப்பட்டமை | B. பில்கேட்ஸ் |
| 3. இந்தியாவிற்கு அணுவாயுத தொழில்நுட்பத்தை அறிமுக ப்படுத்தியவர் | C. அந்தோனியோ குடாரஸ் |
| 4. ''மைக்ரோசெப்ட்'' நிறுவனத்தின் உரிமையாளர் | D. அப்துல்கலாம் |

1. BADC 2. ABCD 3. CADB 4. DCBA

| ''அ'' நிரல் | ''ஆ'' நிரல் |
|---|---|
| 1. பொசுப்பேற்று | A. மிடியாகொடை |
| 2. கணிய மணல் | B. ரத்தோட்டை |
| 3. கெவொலின் | C. புல்மோட்டை |
| 4. மைக்கா | D. எப்பாவள |

1. DCAB 2. ABCD 3. DABC 4. BADC

❖ இல. 31 முதல் 35 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

1.

1. இலங்கையின் கரையோரம் சார்ந்து மேற்கொள்ளப்படும் மீன்பிடிக் கைத்தொழில் எப் பெயரால் அழைக்கப்படுகிறது?

   ………………………………………………………………

2. இப் பிரதேசங்களில் மீன்பிடிக் கைத்தொழில் அதிக அளவில் பரந்து காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.

   ………………………………………………………………

   ………………………………………………………………

3. இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலினை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

   ………………………………………………………………

   ………………………………………………………………

   ………………………………………………………………

2.

1. பொலனறுவையை ஆட்சி மையமாக தெரிவுசெய்த இலங்கை மன்னன் யார்?

   ………………………………………………………………

2. அவரால் ஆற்றப்பட்ட பணிகள் இரண்டை குறிப்பிடுக.

   ………………………………………………………………

   ………………………………………………………………

3. பொலனறுவை இராசதானி வீழ்ச்சியடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினை குறிப்பிடுக.

   ………………………………………………………………

   ………………………………………………………………

❖ இல. 36 முதல் 45 வரை தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் புறவுருவப்படமொன்றில் குறித்துப் பெயரிடுக.

1. பாகியன்கல
2. தலவாக்கலை
3. தலைமன்னார்
4. தம்பதெனிய
5. உடவளவை நிர்த்தேக்கம்
6. மகாவலி கங்கை
7. ஹீருளுவாவி
8. ஜம்புகோளப்பட்டினம்
9. கொக்கிளாய் கடனீரேரி
10. கதிர்காமம்

**கவனத்திற்கு:**

இங்கு சில இடங்கள் மாத்திரமே தரப்பட்டுள்ளன. தரம் 10 வரலாறு புவியியல் குடியியற்கல்வி பாடத்திட்டங்களுக்கு உரிய பாட அலகுகளில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலிருந்து 36 முதல் 45 வரையான வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

## தரம் 11
## மாதிரி வினாக்கள்

❖ இல. 1 முதல் 10 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் இருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

1. சென்னை ஆட்சி முறையின் கீழ் வரி சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர்?

| | |
|---|---|
| 1. வதிவிட அலுவலர் | 2. அவுமில்தார்கள் |
| 3. கலெக்டர்கள் | 4. மடிகே முகாந்திரங்கள் |

2. இவற்றுள் அழிவடையாத சக்தி வளங்களுள் ஒன்று

| | |
|---|---|
| 1. பெற்றோலியம் | 2. காற்று |
| 3. நிலக்கரி | 4. உயிர்த்திணிவுகள் |

3. துரித தொடர்பாடல் ஊடகங்களுள் ஒன்றாக அமைவது?

| | |
|---|---|
| 1. கடிதத்தபால் | 2. போஸ்டர்கள் |
| 2. மின்னஞ்சல் | 4. பத்திரிகை |

4. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை நீதிமன்றம் அமைந்துள்ள இடம் பின்வருவனவற்றுள் எது?
    1. நெதர்லாந்தின் ஹேக் நகரம்
    2. இங்கிலாந்தின் லண்டன் நகரம்
    3. அமெரிக்காவின் நியூயோர்க் நகரம்
    4. சுவிட்சலாந்தின் ஜெனீவா நகரம்

❖ இல. 6 முதல் 10 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் இருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. உலகின் காலநிலை மாற்றங்களை இழிவாக்கிக் கொள்ள பின்பற்றக் கூடிய நடவடிக்கைகளுள் ஒன்று?
    1. புதுப்பிக்கக் கூடிய வலு மூலங்களின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்
    2. இரசாயன உர வகைகளின் பாவனையை ஊக்குவித்தல்.
    3. பச்சை வீட்டு வாயுக்களை சூழலுக்கு விடுவித்தல்
    4. மரபணு பல்லினத்தன்மையை குறைத்தல்

2. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்கள் தமது உரிமைகளைக் கோரி மேற்கொண்ட முதல் வேலை நிறுத்தமாக அமைவது?
   1. தள்ளுவண்டி தொழிலாளர் வேலை நிறுத்தம்
   2. வெள்ளவத்தை நெசவாளர் வேலை நிறுத்தம்
   3. சலவைத் தொழிலாளர் வேலை நிறுத்தம்
   4. கொழும்பு அச்சக வேலை நிறுத்தம்

3. பிறப்பின் போதான ஆயுள் எதிர்பார்ப்பு, கல்வி, கொள்வனவு சக்தி மற்றும் தனிநபர் மொத்த தேசிய உற்பத்தி போன்ற கூறுகளை பயன்படுத்தி கணிப்பிடப்படும் சுட்டி
   1. பௌதீக வாழ்க்கைப் பண்புச் சுட்டெண்
   2. மானிட அபிவிருத்திச் சுட்டெண்
   3. மனித வறுமைச் சுட்டெண்
   4. மனித அமுக்கச் சுட்டெண்

4. சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதனை அடிப்படையாக கொண்ட நோக்கம் ஒன்று அல்லாதது?
   1. பாதுகாப்பு
   2. உயிர்வாழ்தல்
   3. அபிவிருத்தி
   4. சுகாதாரம்

❖ இல. 11 முதல் 15 வரையான வினாக்களுக்கு இடைவெளிக்கு மிகவும் பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. ஆறுகளை அண்டிய தாழ்நிலப் பிரதேசங்களில் நீர் தேங்கி நிற்பதால் ………………………………….............………… நிலம் உருவாகின்றது.

2. ஐக்கிய அமெரிக்க குடியரசின் முதல் ஜனாதிபதியாக தெரிவானவர் ……………………………… ஆவார்.

3. உயர்நிலப் பகுதியொன்றிலிருந்து ஆரம்பித்து பல்வேறு பகுதிகளை நோக்கி ஓடும் அருவிகளால் ……………………………… வடிகால் அமைப்பு உருவாகின்றது.

❖ இல. 16 முதல் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1.




1. இவ்வுருவினால் காட்டப்படுபவர் யார்?

………………………………………

2. போக்குவரத்து துறையில் புரட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கண்ட இவரின் கண்டுபிடிப்பு யாது?

………………………………………

2.




1. மண்ணின் (பக்கப்பார்வை படத்தில் காட்டப்பட்டுள்ளது.) இதில் சிதைவடைந்த பகுதிகள் சார்ந்த சேதனப் பொருட்கள் அதிகளவில் அடங்கியுள்ளது எப்படையில் ஆடும்?

………………………………………

2. படையில் காணக்கூடிய விஷேட பண்பொன்றினைக் குறிப்பிடுக?

………………………………………
………………………………………

3.



1. இப் படத்தினால் காட்டப்படுவது யாது?

………………………………………

2. இந் நிறுவனத்திற்கு உரித்தான அதிகாரங்களுள் ஒன்றினைக் குறிப்பிடுக.

………………………………………

❖ இல. 26 முதல் 30 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ''அ'' மற்றும் ''ஆ'' எனும் இரு நிரல்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பொருத்தப்பாட்டிற்கு அமைய சரியான எழுத்தை தொடர்புபடுத்தி பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

| ''அ'' நிரல் | ''ஆ'' நிரல் |
|---|---|
| 1. சீனா | A. எம்மானுவெல் மெக்ரோன் |
| 2. பிரான்ஸ் | B. விளாடிமிர் புட்டின் |
| 3. ஐக்கிய அமொரிக்கா | C. சீ ஜின்பின் |
| 4. ரஷ்யா | D. டோனல்ட் ட்ரம்ப் |

1.BACD 2. CADB 3. CDBA 4. DCBA

| ''அ'' நிரல் | ''ஆ'' நிரல் |
|---|---|
| 1. நிலக்கரி | A. ஜோன் மெக்கடம் |
| 2. போக்குவரத்து | B. ஜென் ரோட்டல் |
| 3. தொடர்பாடல் | C. ஜேம்ஸ் வோட் |
| 4. விவசாயம் | D. அலக்ஸாண்டர் கிரஹம்பெல் |

1.ABCD 2. BACD 3. CADB 4. ACBD

❖ இல. 31 முதல் 35 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1.

1. இலங்கையில் பயன்படுத்தப்படும் சக்தி வளமொன்றினை பெயரிடுக.

   …………………………………………………………

2. சக்திவளப் பயன்பாட்டின் போது ஏற்படும் பாதகமான விளைவுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

   ………………………………………………………….

   …………………………………………………………

3. சக்தி வளங்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

   ……………………………………………………………

   ……………………………………………………………

   ……………………………………………………………

2.

1. பச்சை வீட்டு விளைவு என்றால் என்ன?

………………………………………………………………

2. பச்சை வீட்டு வாயுக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

………………………………………………………………

………………………………………………………………

3. பச்சை வீட்டு விளைவை இழிவளவாக்கிக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மூன்றினைச் குறிப்பாடுக?

……………………………………………………………………………

……………………………………………………………………………

3.

1. நிலைபேண் அபிவிருத்தி என்பதனால் கருதப்படுவது யாது?

……………………………………………………………

2. நிலைபேண் அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் நாடொன்றின் பிரஜை என்ற வகையில் உமக்குரிய பொறுப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

………………………………………………………………

………………………………………………………………

3. நிலைபேண் அபிவிருத்தியை ஏற்படுத்துவது தொடர்பில் அரசொன்று முகங்கொடுக்கும் சவால்கள் மூன்றினை குறிப்பிடுக

……………………………………………………………………………

……………………………………………………………………………

……………………………………………………………………………

…………………………………………

❖ இல. 36 முதல் 45 வரை தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் புறவுருவப்படமொன்றில் குறித்துப் பெயரிடுக.

1. சிவனொலிபாதமலை
2. கலாஓயா
3. பராக்கிரம சமுத்திரம்
4. தேவேந்திர முனை
5. நாகதீபம்
6. நீர் கொழும்பு
7. புல்மோட்டை
8. கண்டி
9. காலி
10. வெல்லஸ்ஸ

**கவனத்திற்கு** :

இங்கு சில இடங்கள் மாத்திரமே தரப்பட்டுள்ளன. தரம் 11 வரலாறு புவியியல் குடியியற்கல்வி பாடத்திட்டங்களுக்கு உரிய பாட அலகுகளில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலிருந்து 36 முதல் 45 வரையான வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

* இலக்கம் 1 - 5 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையினை தெரிவுசெய்து, அதற்குப் பொருத்தமான இலக்கத்தினை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**தரம் 12, 13**

**மாதிரி வினாக்கள்**

1. 2017 ஆம் ஆண்டில் அணுவாயுத பரிசோதனைகள் பலவற்றை நிகழ்த்தி உலக சமாதானத்திற்கு சவாலை ஏற்படுத்திய நாடொன்றாக அமைவது?
   1. தென்கொரியா
   2. வடகொரியா
   3. ஜப்பான்
   4. ஐக்கிய அமெரிக்க குடியரசு
   5. சீனா (………)

2. நாட்டின் அதிஉயர் சட்டமாக அமைவது?
   1. அரசியல் யாப்பு
   2. சமயம்
   3. சட்டவல்லுனர்களின் கருத்துக்கள்
   4. நீதிமன்றத் தீர்ப்பு
   5. பழக்க வழக்கங்கள் (………)

இல 6 முதல் 10 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைத் தொகுதியை தெரிவு செய்து அதற்கு பொருத்தமான இலக்கத்தை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவங்களை மாத்திரம் காட்டும் விடைத் தொகுதியை தெரிவு செய்க.

   A - உணவு மற்றும் விவசாய அமைப்பு
   B - பிம்ஸ்டெக் அமைப்பு
   C - சர்வதேச நாணய நிதியம்
   D - சர்வதே தொழிலாளர் அமைப்பு
   E - உலக உணவு வேலைத்திட்டம்.

i. **ABC மற்றும் D ஆகும்**

ii. **ABD மற்றும் Eஆகும்**

iii. **ABC மற்றும் Eஆகும்**

iv. **ACD மற்றும் Eஆகும்**

v. **BCD மற்றும் Eஆகும்**

(.........)

2. இலங்கையின் உயர்நீதிமன்றத்திற்கு உரிய நீதித்துறை அதிகாரங்களை மாத்திரம் உள்ளடக்கியுள்ள விடைத் தொகுதியை தெரிவு செய்க.

A - அரசியல் யாப்புச் சட்டங்களுக்கு விளக்கமளிக்கும் அதிகாரம்

B - பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்.

C - அடிப்படை உரிமை மீறல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்

D - பாராளுமன்ற தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்

E - ஜனாதிபதி தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம்

i. **ABC மற்றும் D ஆகும்**

ii. **ACD மற்றும் Eஆகும்**

iii. **ABC மற்றும் Eஆகும்**

iv. **ABD மற்றும் E ஆகும்**

v. **BCD மற்றும் Eஆகும்**

(.........)

❖ வினா இலக்கம் 11 முதல் 15 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு இடைவெளிக்கும் பொருத்தமான விடையை எழுதுக.

1. 2017 பெண்கள் சர்வதேச கிண்ண ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் .............................................. அணி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது.

2. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைச் செயலகம் ....................................... நகரில் அமைந்துள்ளது.

3. 21 வது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிக்கு அனுரசணை வழங்கிய நாடு ...................................... ஆகும்.

❖ வினா இல. 16 முதல் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்குக.

1.

I. நில நடுக்கத்தின் அளவை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் கருவி யாது? ......................................

II. 2004 டிசம்பர் 26ம் திகதி இலங்கையில் சுனாமி பேரழிவை ஏற்படுத்திய நிலநடுக்கம் எத்தீவை அண்டிய பிராந்தியத்தில் ஏற்பட்டது? ........................

2. நினைவக அட்டை ( memory card) ஒன்றில் சேமிக்கப்படக் கூடிய நிழற்படங்களின் அளவைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டினை எழுதுக.

…………………………………………………………………………..……….

………………………………………………………………………………

❖ இல. 21 முதல் 25 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க.

1.



I. இவ்வுருவினால் காட்டப்படுபவர் யார்?

…..........................................................

II. இவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவாவதற்கு அடிப்படையாக அமைந்த அரசியல் யாப்பு எது?

…..........................................................

2.




I. இவ்வுருவினால் காட்டப்படும் குறியீடு யாது?

..............................................................

II. இக்குறியீட்டுடன் தொடர்புடைய செயன்முறையை பயன்படுத்துவதன் பிரதான நோக்கம் யாது?

..............................................................

2009 - 2012 வரை இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் விபரம்

| தலைப்புக்கள் | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|
| வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை | 447890 | 654476 | 855975 | 1005 605 |
| அண்ணளவாகப் பெற்ற வருமானம் (ரூ. மில்லியன்) | 40133 | 65018 | 91926 | 132427 |
| தொழில் வாய்ப்பு பெற்றோரின் மொத்த எண்ணிக்கை | 124970 | 132055 | 138685 | 162869 |

⟶ மூலம்:- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

III. அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் உல்லாசப் பிரயாணிகளின் இலங்கை வருகை தொடர்பாக வெளிப்படும் முக்கிய விடயம் யாது?

……………………………………………………………

IV. இவ்விடயம் இலங்கை பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் சாதக விளைவொன்றினை குறிப்பிடுக.

……………………………………………………………

❖ இல. 26 முதல் 30 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ எனும் இரு நிரல்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பொருத்தப்பாட்டிற்கு அமைய அவற்றினை தொடர்புபடுத்தி பெறப்படும் சரியான விடைக்குரிய இலக்கத்தை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. ‘‘அ’’ நிரலின் அதிகரிப்பானது ‘‘ஆ’’ நிரலின் வீழ்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் விதத்தை தொடர்படுத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது

| ‘‘அ’’ நிரல் | ‘‘ஆ’’ நிரல் |
|---|---|
| 1. வருமானம் | A. சேமிப்பு |
| 2. நுகர்வு | B. பண்டத்தின் விலை |
| 3. எழுத்தறிவு | C. வறுமை |
| 4. உற்பத்தி | D. இறக்குமதி |
| 5. தீர்வை வரி | E. அறியாமை |

1. ABDCE 2. BCADE 3. CAEBD 4. CABDE 5. DEBAC

(………)

2. ‘‘அ’’நிரலில் காட்டப்பட்டுள்ள நபர்களுக்கு உரிய கைத்தொழிலை ‘‘ஆ’’ நிரலுடன் பொருத்தும் போது கிடைக்கப் பெறும் விடையை தெரிவு செய்க.

| ‘‘அ’’ நிரல் | ‘‘ஆ’’ நிரல் |
|---|---|
| 1. டெம்ளர் | A. நீராவி எஞ்சின் |
| 2. கலிலியோ கலிலி | B. தொலைக்காட்சி |
| 3. ஜேம்ஸ் வாட் | C. மோட்டார் வண்டி |
| 4. ஜோன் மெக்கடம் | D. பெருந்தெரு நிர்மாணம் |
| 5. ஜோன் லொகி பெயாட் | E. தொலைக்காட்டி |

1. ACEDB 2. CEADB 3. DCABE 4. CDABE 5. DABCE

(………)

❖ இல. 31 முதல் 35 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

1.

1. இலங்கையில் பெருமளவில் பயன்படுத்தப்படும் சக்தி மூலமொன்றினைப் பெயரிடுக.

   ……………………………………………………………

2. சக்தி முலங்களை சிக்கனமாக பயன்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் இரணடினைக் குறிப்பிடுக.

   …………………………………………………………….
   ……………………………………………………………

3. அதில் ஒரு விடயம் தொடர்பில் நீர் செயற்படும் விதத்தை சுருக்கமாக விளக்குக.

   ………………………………………………………………

2.

1. இலங்கையின் அதிஉயர் நீதித்துறை நிறுவனம் எது?

   ………………………………………………………………

2. அடிப்படை உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் இந்நிறுவனம் தவிர்ந்த 2ம் குடியரசு யாப்பினூடாக உருவாக்கப்பட்ட வேறு இரு நிறுவனங்களை குறிப்பிடுக.

   ………………………………………………………………
   ………………………………………………………………

3. தாமதமின்றி மற்றும் பக்கச்சார்பின்றி நியாயத்தை நிலைநாட்டுதல் சமூக வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தும் விதத்தை சுருக்கமாக விளக்குக.

   ……………………………………………………………………………
   ……………………………………………………………

❖ இல. 36 முதல் 45 வரை தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் புறவுருவப்படமொன்றில் குறித்துப் பெயரிடுக.

1. இலங்கையின் உயரமான நீர்வீழ்ச்சி அமைந்துள்ள ஆறு
2. புராதன காலம் தொட்டு பிரபல்யம் பெற்றுள்ள இலங்கையின் இயற்கை துறைமுகம்
3. இலங்கையின் இறுதி இராசதானி அமைந்துள்ள நகரம்
4. இலங்கையில் அதிகூடிய வலுவை உற்பத்தி செய்யும் நீர்மின் நிலையம் அமைந்துள்ள இடம்

❖ இல. 46 முதல் 50 வரை தரப்பட்டுள்ள இடங்களை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

1. சீனாவின் துயரம் என அழைக்கப்படும் ஆறு
2. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பாராளுமன்ற ஆட்சி முறையை அறிமுகம் செய்த நாடு
3. உலகில் 100% நகரமயமான மக்கள் தொகையினர் வாழும் ஆசிய நாடு


**கவனத்திற்கு:**

இங்கு குறிப்பிட்ட சில இடங்கள் மாத்திரமே தரப்பட்டுள்ளன. தரம் 10/11 வரலாறு /புவியியல் /குடியியற்கல்வி 12/13 அரசியல் விஞ்ஞானம்/ தர்க்கவியல் மற்றும் விஞ்ஞான முறையியல் பாடத்திட்டங்களுக்கு உரிய பாட அலகுகளிலிருந்து மற்றும் பொது அறிவு சார்ந்த விடயங்கள் ஊடாக வலியுறுத்தப்படும் இடங்களிலிருந்து 46 முதல் 50 வரையான வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

## சமூக விஞ்ஞானப் போட்டி - 20……

தரம்: ………………….

பரீட்சை இல.: ………………………..



**சமூக விஞ்ஞானப் போட்டி - 20……**

தரம்: 12/13

பரீட்சை இல.: ………………………..

